செய்தி வெளியீடு எண். 787 நாள் 03 .11. 2009

<u>செய்தி வெளியீடு</u>

**<u>தருமபுரி மாவட்டத்தில் 8.11.2009(ஞாயிற்றுக் கிழமை) அன்று பெரியார் நினைவு சமத்துவபுரம் திறப்பு விழா, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, வளர்ச்சித் திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கள் விழா. மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள்கலந்து கொள்கின்றார்கள்.</u>**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், 8.11.2009 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு, தருமபுரி மாவட்டம் பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், பருவதன அள்ளி ஊராட்சியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை திறந்துவைத்து, மகளிர் சுய உதவிக் குழுக்கு சுழல் நிதி வழங்கி, புதிய கட்டடங்களை திறந்துவைத்து, வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றுகின்றார்கள். இவ்விழாவிற்கு தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப அவர்கள் தலையேற்கிறார்கள்.

இவ்விழாவில், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு இரா.தாமரைச் செல்வன் அவர்கள், பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் திரு பி.என்.பெரியண்ணன் அவர்கள், மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு வ.முல்லைவேந்தன் அவர்கள், பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு கே.பி.அன்பழகன் அவர்கள், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு இல.வேலுசாமி அவர்கள், அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு பி.டில்லிபாபு அவர்கள், காவேரிப்பட்டிணம் சட்டமன்ற உறுப்பினர் திரு டி.ஏ.மேகநாதன் அவர்கள், தருமபுரி மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திரு எஸ்.பி.வெங்கடேஸ்வரன் அவர்கள், பென்னாகரன் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி செ.திரௌபதி அவர்கள், பருவதன அள்ளி ஊராட்சித் தலைவர் திரு பி.சின்னசாமி அவர்கள்மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

இவ்விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு என்.சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரையும், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார் அவர்கள் நன்றியுரையும் ஆற்றுகின்றார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9